விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

கலை 17 ஆடி 22 ஜூலைஹஃ 18 இதழ் 177

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6 8 1985

இந்திய வெளியுறவுச் செயலர் பண்டாரி வியாழனன்று கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு செயலாளரும் இந்தியப் பிரதம மந்திரியின் விசேஷத் தூதுவருமான திரு. ரொமேஷ் பண்டாரி எதிர் வரும் வியாழக்கிழமை இலங்கை வருகிறார்.

அடுத்தவாரம் பூட்டான் தலைநகர் திம்புவில் ஆரம்பமாகும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இரண்டாம் கட்டச் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றி இலங்கை தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காகவே வருகைதரும் திரு. ரொமேஷ் பண்டாரி திம்பு மகாநாட்டில் இலங்கை தெரிவிக்கவிருக்கும் யோசனைகள் குறித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

திம்புவில் நடைபெற்றமுதல் கட்டப் பேச்சுக்களில் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தமது நிலைகளை எடுத்தியம்புவதற்கான சந்தர்ப்பமாக மாத்திரமே அமைந்தது என்பதால் இனி நடக்கவிருக்கும் பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என்பதில் இந்திய அரசு மிகவும் அக்கறை கொண்டிருப்பதால் இலங்கை

(8-ம் பக்கம் பார்க்க)

நேற்று கொழும்பில் நடந்தது

இராணுவ இணைப்பதிகாரிகள் விசேஷக் கூட்டம்!

பொதுமக்களுக்குப் பாதிப்பில்லாமல் சட்டத்தை நிலைநாட்ட உத்தரவு

(பெஞ்சமின் ராஜரட்ணம்)

வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள ராணுவ இணைப்பதிகாரிகள் அனைவரும் விஷேச ஆலோசனைக்கென நேற்று கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் பணிப்பின்பேரில் கொழும்புக்கு அழைக்கப்பட்ட இவ்விணைப்பதிகாரிகளின் மகாநாட்டில் இன்றைய நாட்டின் நிலைமைபற்றி விபரமாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம் பெற்ற வன்செயல்கள்பற்றி ஆராயப்பட்டதாகவும், இச் சம்பவங்களைப்பற்றிய முழு விபரமும் அடங்கிய பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப் படவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

அதேசமயம் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்

(5ம் பக்கம் பார்க்க)

கடத்தப்பட்ட பஸ்

(வாழ்ப்பாணம்)

யாழ். செல்வசந்நிதிக்கு அண்மையில்வைத்து நேற்றுக்காலை வ.பி.போ.ச. சபைக்குச் சொந்தமான பஸ் இனந்தெரியாத 3நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

கடத்தப்பட்ட பஸ்ஸில் விருந்த சாரதி-நடத்துனர் உட்பட பிரயாணிகளையும் பொருட்களையும் இறக்கி விட்டே அப்பஸ் கடத்திச் செல்லப்பட்டதாம்.

கடத்தப்பட்ட பஸ் பின்னர் மூசல் இன்றி கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

மா)

ஹெலிகப்டர் பறந்து திரிந்தது

(வாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் பிற்பகல்வரை பனாவிக்கும் யாழ் கோட்டைக்குமிடையே ஹெலிகொப்டரி பறந்து திரிந்தவண்ணமிருந்தது.

முன்னர் எப்போதுமில்லாத வகையில் ஹெலிகொப்டரி ஒடிக்கொண்டிருந்ததால் யாழ் மக்கள் மத்தியில் பலவிதவதந்திகள் உலாவின. (மா)

'புளூபிலிம்' தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

மினிசினிமாவில் 'புளூபிலிம்' காட்டும் இடத்திற்கு சென்ற இளைஞர் சோஷ்டி அங்குள்ள வர்களை எச்சரிக்கை செய்ததுடன் அந்த 'புளூபிலிம்' மையும் தீவைத்து எரித்தனராம்.

இலங்கை வள்ளங்களை விடுவித்தனர்

[சென்னை]

இந்திய கரையோரக் காவல் படையினரால் பிடித்து வைக்கப் பட்டிருந்த மூன்று இலங்கை மீன்பிடி வள்ளங்களும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன. இந்திய கடல் எல்லையை மீறியதாக இப்படகுகள் கைப்பற்றப் பட்டிருந்தன.

வவுனியாவில் சில பகுதிகளில் பொலிஸ் ரோந்து சேவைக்கு ஏற்பாடு

(அலுவலக நிருபர்)

வவுனியாவில் உள்ள சில இடங்களில் பொலிசார் ரோந்து சேவையாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் சமணன்குளம் மாமடு, பாவற்குளம், வாரிக் குட்டியூர் பெரியகுளம் ஆகிய இடங்களில் அண்மைக்காலங்களில் இம்பெற்று வந்த கொலை, கொள்ளை, பயிர்நாசம் செய்தல், பெண்களின் மாணபங்கப்படுத்தல் போன்ற வன்முறைச்சம்பவங்கள் இப்பொழுது தணிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதிகளில் சிலர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட மறிரோரு சம்பவத்தைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து பலர் வெளியேறி வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனராம். அதன் காரணமாகவே அண்மைக்காலங்களில் இடம் பெற்றவன்முறைச்சம்பவங்கள் தணிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

கப்பல் சேவை

(கொழும்பு)

தூத்துக்குடி-கொழும்பு கப்பல்சேவை இப்போதைக்கு ஆரம்பமாகும் சாத்தியமில்லை.

தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல்சேவையை மீண்டும் ஆரம்பிக்கவே இந்திய இலங்கை அதிகாரிகள் விருப்பு கின்றனர் நிலைமைகள் சீரானதும் மீண்டும் இக்கப்பல்சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

305 வடபகுதி இளைஞர்கள் இன்று தெஹிவலையில் விடுதலை

[அலுவலக நிருபர்]

பூஸா முகாமிலிருந்து வடபகுதியைச் சேர்ந்த 305 இளைஞர்கள் இன்று காலை 9மணிக்கு விடுதலைசெய்யப்படவுள்ளனர்.

விடுதலைசெய்யப்படும் இவ்விளைஞர்கள் இரண்டாகப்பிரிக்கப்பட்டு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

பூஸா முகாமிலிருந்து பாதுகாப்பாகக் கொழும்பு தெஹிவலையிலுள்ள மத்திய மகாவித்தியாலயத்திற்கு 305 இளைஞர்களும் கொண்டுவரப்படுவர். மன்னாரைச் சேர்ந்த 101 இளைஞர்களை அவர்களது பெற்றோர் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம்.எ.அப்துல்காதர் மேற்கொண்டுள்ளார். இவருக்கு உதவியாக உதவி அரசாங்க அதிபர்கள் திரு அருந்தவச்செல்வம், ஜனாப் குரூஸ் ஆகியோர் இருப்பர்.

வவுனியாவைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களையும் மற்றும் முருங்கன், முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களையும் பெற்றோரும் அவ்வப்பகுதி அரசாங்க உத்தியோகத்தர்களும் பொறுப்பேற்கவுள்ளனர்

யாழ்ப்பாணம் சுழிபுரத்

[5-ம்பக்கம் பார்க்க]

உருக்கமான வேண்டுகோள்

கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்து கொண்டிருந்த ELF 350 40ஸ்ரீ 1913 இலக்கம் கொண்ட புதிய வான் 21-5-85ல் நெடுங்கேணியிலிவைத்து சிலரால் கடத்திச் செல்லப்பட்டது. முல்லைத்தீவு சந்தையில் சிறுவியாபாரம்செய்து சிறிதுசிறிதாகச் சேர்த்த பணத்துடன் பிரான்ஸ் கம்பனியில் கடன்பட்டு வாங்கப்பட்ட இந்த வான் வாங்கிய பின் அதைக்கொண்டு சரியாக உழைக்கவும் இல்லை. கஷ்டப்பட்டவர்களுக்கு மேலும் மேலும் கஷ்டம் கொடுத்தால் அவர்கள் எங்கேபோவது நேர்மையான இயக்கங்களே இதைக் கண்டுபிடித்து எம்மைக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

அமிர்தசித்தி ஐயர்
மார்க்கெற்,
முல்லைத்தீவு.

4886

வன்செயலால் பாதிப்புறும் மக்கள் புகார் செய்க

அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் எவரும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டால், அதுபற்றி பொலிஸில் புகார் செய்வதுடன் அப்புகாரின் ஒரு பிரதியை தமதுபகுதி உதவி அரசாங்க அதிபருக்கும், ஒரு பிரதியை பகுதி பிரஜைகள் குழுவுக்கும், ஒரு பிரதியை சமூகசேவைகள் பகுதிக்கும் அனுப்பி வைக்கும்படி யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு செய்வதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்காதுபோனாலும் அவசியம் ஏற்படும்போது எதிர்காலத்தில் பாதிப்புக்குள்ளானவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்கு இது உதவியாய் இருக்குமென்று அவர் தெரிவித்துள்ளார்.

உடல், உயிர், சொத்து, ஆகிய எந்தவிதமான பாதிப்பாக இருந்தாலும் அவைபற்றிய முழுவிபரங்களையும் இந்தப் புகார்களில் தெரிவிக்கும்படி அவர் கோரியிருக்கிறார்.

(8ம் பக்கம் பார்க்க)

அரவளம்பரம்

விற்பனைக்கு

கோப்பி அரைக்கும் மெஷின் விற்பனைக்குண்டு. (Type EM 25/250With 1 50 kw Single Phase Motor) ஆ ஆனந்த ராஜா, இளம் முருகன் ஸ்ரோர்ஸ் 177, மார்க்கெட் வீதி, கல்முனை. T P. 2031 (4856)

நிறம் அலசேசன் நாய் ஏழு மாதம் விற்பனைக்குண்டு சாந்தி நிலையம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அருகாமையில். (4880)

அத்தியடி பிள்ளையார் குறுக்கு வீதியில் 2 1/2 பரப்பில் 5 அறைகள், குளியலறை கிணறு சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: 104/1, அத்தியடி, யாழ்ப்பாணம். (4875)

கல்வி

திருநெல்வேலியில் AL 87 திரு. A. மகாதேவா அவர்களின் இரசாயனவியல் வகுப்புக்கள் 07-09-85 இல் ஆரம்பம் திங்கள், புதன் 2-30 பௌதிகவியல் ஆசிரியர் N பதுமநாதனின் இல்லம். 4888

கல்வி

Radio and Electronic Engineering. சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள். பெண்களுக்காகிய பிரிவு 10-8-85 சனி காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது தொடர்புகொள்க: பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். (4879)

தவறிவிட்டது

நல்லதம்பி செல்லையா செட்டிபுலம், வேலணை கிழக்கு என்பவருடைய அடையாள அட்டை 5-8-85 அன்று பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். 4887

இல: 552852419 V தருமலிங்கம் விமலன் இல: 16 காட்டுக் கந்தோர் லேன்; சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை சென்ற 2-8-1985 அன்று நல்லூர் ஆலய உட்புறம் காலை 10 மணி உற்சவ காலத்தின் போது தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திற்கு அல்லது நல்லூர் ஆலய சபையில் ஒப்படைக்கவும். [4890]

மேற்கு பேர்லின்/பிரான்ஸ்

பிரயாணங்கள் AUGUST 15,22 திகதிகளில்
எமது பிரதிநிதி உங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச்செல்கின்றார்.

மற்றும் சகல விமான டிக்கட்டுகளுக்கும்
விசா, பாஸ்போட், பொண்ட்
என்பனவற்றிற்கும்

லிப்ரஸ் லிமிட்டெட்

(TRAVELS DEPT.)

70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

LIBRAS LTD.,

PAUL VI CENTRE.
24, FRONT STREET,
COLOMBO-1.

நினைவஞ்சலி

தொண்டமானாறு செல்வச்சந்நிதி
ஆனந்தாச்சிரம
முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமீஜீ

தோற்றம்: 26-09-1913 சிவபதம்: 24-07-1985

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தின் நிர்வாகியாகிய முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிஜீ அவர்களின் அஸ்திவைத்து சமாதி நிறுவுதல் 08-08-85 காலை 10-00 மணிக்கு நடைபெறும் என அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
ஆச்சிரம அன்பர்கள்.

(4881)

வைத்தியம்

மூலவியாதிகள், பாரிச வாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும் பீனிசம், எலிமா, சருமவியாதிகள், தொய்வு, கண் ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபாதிரவங்கள், குழந்தைப் பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சித்த ஆயுர்வேத முறைப்படி விஷேசமான சிகிச்சை பெறலாம், Dr. மங்களாம்பிகை D,A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, அரசவீதி, சங்கிலியன்வீதி, நல்லூர் (4882

மணப்பந்தல்

யாழ் இந்து உயர் வேளாள பௌரவமான நற்குணமுள்ளவரும் செவ்வாய் தோஷம் இல்லாதவரும் M Sc எஞ்சினியரிங் பட்டம் பெற்று வெளிநாட்டில் பதவி வகிப்பவரும், 29 வயதுடையவராகிய மணமகனுக்கு ஆங்கில அறிவுள்ள குடும்பமும், வசதியுள்ள அழகான மணமகள் தேவை. விபரங்கட்கு உடன் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 4853, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 4853

மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் வாசுரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் அதிபர் எஸ் முத்துக்குமாரசாமி தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது

பிரதமவிருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். ஆலாலசுந்தரமும், சிறப்புவிருந்தினர்களாக, கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி ஏ. வி. தங்கராசா, இலங்கை தமிழாசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. ரீ மகாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டியில் வள்ளுவன் இல்லம் 278 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தையும், கம்பன் இளங்கோ ஆகிய இல்லங்கள் முறையே 255, 195 ஆகிய புள்ளிகளைப்பெற்று இரண்டாம், மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

துப்பாக்கி அபகரிப்பு

(வவனியா தே ணிக்கல்லு)

வவனியா தேணிக்கல்லு என்ற இடத்தில் வசிக்கும் வனியா மாவட்ட அமைச்சரின் அலுவலகத்தில் பணிபுரியும் சிறுறாழியர் ஒருவருடைய துப்பாக்கி கடந்த புதன்கிழமை இரவு இனம் தெரியாத சிலரினால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

இம்மாத ஓய்வூதியம் 15-ல் வழங்கப்படும்

(கல்வியங்காடு)

இம்மாத ஓய்வூதியம் 15 ம் திகதி வழங்கப்படும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஆறுமாத காலத்துக்குரிய பற்றுச்சீட்டுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன இப்பற்றுச்சீட்டுக்களை இம் மாதம் 13 ந் திகதிக்குமுன் கிடைக்கபெறுதவர்கள் யாழ்ப்பாணம் ஓய்வூதியக்கிளையுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கச்சேரிக்கு நேரில் வர வேண்டியதில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கச்சேரியிலும் தபால் கந்தோர்களிலும் ஓய்வூதியத்தைப் பணமாகப் பெறுபவர்களுக்கான ஒவ்வூதியம் வழங்கும் திகதி இன்னமும் நிர்ணயமாகவில்லை எனவும் தெரிகிறது.

வேலைக்காரச் சிறுவன் மரணம்: கொலை எனத் தீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் கிணற்றுக்குத் தப் பலியான வேலைக்காரச் சிறுவன் ஜெகேந்திரனின் (12 வயது) மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

சந்தேகநபரான இறந்தவரின் அண்ணன் நேற்றுக் கோர்ட்டில் ஆஜராகினார். இவரை தொடர்ந்து 5000 ரூபா சொந்தப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

விசாரணை முடிவில் கொலை எனத்தீர்ப்பளித்த நீதவான், தொடர்ந்து விசாரணை செய்யுமாறு பொலிஸாரை பணித்துள்ளார்.

"பாடசாலையின் துரித முன்னேற்றம்"

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கும் ஆரம்ப பாடசாலைகளில் முன்னணி வகிக்கும் இப்பாடசாலையின் துரிதமுன்னேற்றத்துக்கு இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரையும், அதிபர், ஆசிரியர்களையும் முதலில் பாராட்டவேண்டும் என்று நல்லூர் சென் பெனடிக்ற் ரோ கபாடசாலை விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பை அவர் மிகவும் பாராட்டினார். 'லில்லி' 'ரோஸ்' ஆகிய இரு இல்லங்களிடையே இப்போட்டி நடந்தது

பாடசாலை அதிபர் சங்கைக்குரிய சகோதரி ரோசா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது சங்கைக்குரிய தார் மேல் மடத்து தாயார் மேபிள் பிரதம விருந்தினராகக் கலந்து மாணவிகளை மகிழ்வித்தார்.

பிரஜைகள் குழு தலைவராக தெரிவு

(பூநகரி)

பூநகரிப் பகுதி பிரஜைகள் குழுவின் புதிய தலைவராக திரு. பொ தங்கராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். அபிவிருத்திச்சபை பூநகரி அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலையில் இவர் கடமையாற்றுவதோடு பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினராகவும் இருந்து வருகிறார். பிரஜைகள் குழுச் செயலாளராக பூநகரி தெங்கு பளம் பொருள் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. ஏ.வீ கோமாணிக்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளையில் ஈடுபட்டோருக்கு ஓர் வேண்டுகோள்

எமது ஸ்தாபனத்தில் நடைபெற்ற கொள்ளையின் போது எமது வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட கலர் ஆடர்களும் (படம் எடுக்கப்பட்ட பிலிம் ரோல்கள் / நெகட்டிவ்கள்) அடங்கியுள்ளபடியால் வாடிக்கையாளர்களின் நலன் கருதி அவற்றைத் திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஞானம்ஸ் ஸ்ருடியோ

(4891)

விற்பனைக்கு

உயரமான, நீளமான புதிய நிலையில் உள்ள 4' நீளமானதும், 2' உயரமானதும் கண்ணாடி சோக்கேசுகள், புடவை, குடைரசறி மாமிசக் கடைகளுக்கு ஏற்றவை உடன் விற்பனைக்கு உண்டு.

பிறவுண்சன் ரேட் சென்ரர்

கூட்டுறவு பணிமனை கட்டிடம், K K.S. வீதி, யாழ்ப்பாணம்.

[4839]

எட்டாவது

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் சுஜிதன்

சுன்னாகம் பருத்திச்சலட்டியைச் சேர்ந்த சுந்தர ராஜன் - லிங்கேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுஜிதன் தனது எட்டாவது பிறந்த நாளை இன்று (6-8-85) கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பாச்சி, ஐயா, அம்மம்மா, மாமாமார், சித்தப்பா மார், விஜிதா, சிந்தி அனைவரும் முருகன் அருள் பெற்று சகல கலைகளிலும் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள். (4889)

அந்த அழிவின் நேரம்



இப்படத்தில் காணப்படுவது ஒருபுதை பொருள் அகழ்வுக் கண்டு பிடிப்பல்ல அணுகுண்டு அழிவின் இடிபாடுக்குள் கிடந்து எடுக்கப்பட்ட ஒரு கைக்கடி காரமே இதுவாகும்.

ஹிரோஷிமாவை அணுகுண்டு துவம்சம் செய்த காலை எட்டுமணி 16 நிமிடத்தையே இக்கடிகாரம் காட்டுகின்றது. அந்த அரக்கக் குண்டின், அழிவு நேரத்தை அதற்கு இரையான ஒருவரின் இக்கடி காரம், திடீரென ஸ்தம்பித்து இப்படிக் காட்டி நிற்கின்றது! (இ)

அணுக்குண்டு அழிவின் 40-வது ஆண்டு— வெள்ளமாளிகை, பென்ரகனை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டம்!

15 ஆயிரம்பேர் 15 மைல்களை நிறைத்து நின்றனர்!!

வாஷிங்டன், ஆகஸ்ட் 5

ஹிரோஷிமாவில் முதலாவது அணுக்குண்டு போடப்பட்டு 40 ஆண்டுகள் பூர்த்தியாவதை (இன்று ஆகஸ்ட் 6) முன்னிட்டு வாஷிங்டனில் வெள்ளமாளிகை, பென்ரகன் போன்றவற்றைச் சுற்றி மாபெரும் அணு ஆயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சுமார் 15 ஆயிரம் மக்கள் 15 மைல்கள் தூரத்துக்கு வாஷிங்டனில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அமெரிக்க ஜனாதிபதியின் வாச தலமான வெள்ளை மாளிகை, அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்ரகன்' ஆகியவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்துநின்றதுடன் வாஷிங்டனில் வேறுபல கேந்திரப் பகுதிகளையும் அவர்கள் முற்றுகையிட்டிருந்தனர்.

வாகனப் போக்குவரத்துக்கு மட்டுமே இடைவெளிவிட்டு வீதிகள், நடைபாதைகள், மைதானங்கள், பூங்காக்கள் அனைத்தையும் இந்த அணு ஆயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நிறைத்திருந்தது.

மீண்டுமொரு அணுக்குண்டு அழிவுவேண்டாம், விலங்குகள் பறவைகளும் அணுஆயுதப் போராட்டத்தில் மனிதர்களுடன் ஒன்றிணைந்த சகோதரர்களே! போன்ற கோஷங்களும், பதாகைகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இடம் பெற்றன.

அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆக 6ம் திகதி முதலாவது அணுகுண்டு ஜப்பானில் ஹிரோஷிமா நகரில் வீசப்பட்டது. இரண்டாவது குண்டு ஆகஸ்ட் 26ம் திகதி நாகசாகியில் வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

● இஸ்ரேலில் பயங்கரவாதம் மீது

கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானம்!

'மரணதண்டனை'க்கு பிரதமர், பாதுகாப்பமைச்சர் எதிர்ப்பு!

ரெல்அவிவ், ஆக. 5,

இஸ்ரேலிய அரசாங்கம் பயங்கரவாதிகள் மீது கடும் நடவடிக்கைகளை எடுக்க முன் வந்துள்ளது. ஆயினும் இந்த நடவடிக்கைகளில் 'மரணதண்டனை' இடம் பெறுவதை இஸ்ரேலியப் பிரதமர் திரு. ஷிமொன் பெரசும், பாதுகாப்பு அமைச்சர் யிட்ஷாக் ராபினும் வன்மையாக எதிர்த்துள்ளனர்.

ஜோர்தானின் மேற்குக் கரையோரம் காஸாப் பகுதிகளில் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலியக் குடியிருப்புகள் மீது தாக்குதல்களை நடத்துவது அண்மைக் காலங்களில் அதிகரித்து வந்துள்ளது. கடந்த மாதம் இத்தாக்குதல்களில் சுமார் 5 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்தே பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்கக் கடுஞ் சட்டங்களைக் கொண்டு வருவதற்கு இஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பிரதான தண்டனையான மரண தண்டனையை நடைமுறைப் படுத்துவது பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆயினும் இஸ்ரேலியப் பிரதமர் திரு ஷிமொன் பெரஸ் பாதுகாப்பு அமைச்சர் ஷிஷாக் ராபின் ஆகியோர் மரண தண்டனை அமுலாக்கப்படுவதை கடுமையாக எதிர்க்கின்றனர்.

முன்பு பிரிட்டன் ஆட்சியாளர்களினால் இஸ்ரேலியசுதந்திரத்துக்கு முன்னர் யூதர்கள் மரணதண்டனைகள் மூலம் கொலைப்பட்டதை நினைவு கூர்ந்தே அவர்கள் இந்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை அவரிளின் வசிப்பிடங்களிலிருந்து அகற்றுவது, விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைப்பது போன்றன புதிய நடவடிக்கைகளில் இடம் பெறவுள்ளன.

இந் நடவடிக்கைகள் அமுலாகவிருப்பதையடுத்து ஜோர்தான் மேற்குக் கரையோரப் பகுதிகளில் இஸ்ரேலியச் சிறைச்சாலைகள் விரிவுபடுத்தப்படவுள்ளன. (கி)

சவுதிஅரேபியாவின் தலைநகரான றியாட்டில் மன்புவாதீம் என்னும்இடத்தில் இருக்கும் 'அபோதானியன்' கம்பெனியில் பணியாற்றும் இலங்கை இந்திய ஊழியர்களினால் கூரவெட்டி புனித அந்தோனியார் ஆலய புதிய கட்டிடத்திற்கென நிதி உதவியாக வழங்கப்பட்ட ஏழாயிரத்து எழுநூற்றி எழுபதைந்து ரூபாவிற்கான காசோலையை இக்கம்பனியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியான ஹாஜி மொகமட் சரீவ் துன்னூனையைச் சேர்ந்த கே. ஜெயரட்ணத்திடம் கையளிப்பதை படத்தில் காணலாம். படத்தில் இடமிருந்து வலமாக பி. எஸ். சிவகுமார் (மீசாலை), ஜே. அல்வினஸ் (நெடுந்தீவு) ஆகியோரும் காணப்படுகின்றனர். மீசாலை தெற்கைச் சேர்ந்த பி. எஸ். சிவகுமார் தலைமையிலான குழு நிதி திரட்டுவதில் ஈடுபட்டதாகவும் மேலும் நிதி வந்து சேர்ந்ததும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னபிரிக்க அரசுக்கு——

சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்த எச்சரிக்கை!

டேர்பன், ஆக.5

பெரும்வேலை நிறுத்தம் ஒன்றில் குதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளாகும் என்று தென்னபிரிக்க அரசை அந்நாட்டின் சுரங்கத் தொழிலாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இந்த எச்சரிகை தென்னபிரிக்க அரசை மிகவும் நிலை தளரச் செய்யும் ஒரு அறிவிப்பு என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

"தென்னபிரிக்க மீது வெளிநாட்டுப் பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் சகல கறுப்பின சுரங்கத் தொழிலாளர்களும் வேலையிழக்க நேரிடும்" என்று தென்னபிரிக்க அதிபர் திரு பி. எம். போத்தா அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்தே கறுப்பின சுரங்கத் தொழிலாளர்கள் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தனர்.

தென்னபிரிக்காவில் பிரதான பொருளாதார உயிர்நாடியாக சுரங்கத் தொழில் அமைந்துள்ளது. இந்நாட்டின் சுரங்கத் தொழிற்சாலைகளில் பெரும் பாலானவை வெள்ளையர்களுக்கே சொந்தமானதாகும்.

இவற்றில் இந்நாட்டின் பெரும்பான்மையினரான்கறுப்பினத்தவரே அதிகளவில் தொழில்புரிகின்றனர். எனவே இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தால் அச்சுரங்கங்கள் மூடப்படவேண்டிய நிலைக்குள்ளாகும் கூடவே தென்னபிரிக்கா அரசின் பொருளாதாரத்துக்குப் பலத்த அடி ஏற்படும்.

தென்னபிரிக்காவில் போடப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தையும் அரசாங்கம் நீக்கவேண்டுமென கறுப்பின சுரங்கத் தொழிலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கூடவே கறுப்பினத்தவர்களின் பகுதிகளில் மூடப்பட்டுள்ள வெள்ளையர்களின் தொழிற்சாலைகள் திறக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (கி)

முறியடிப்பு

[சென்னை]

இராமேஸ்வரம் கடல்பகுதியில் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் பொருட்களை தமிழ்நாட்டு சுங்கப்பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இக் கடற்றொழில் பொருட்களையும் கடற்றொழிலாளர்களையும் பிடிக்கும் முயற்சியில்; சுங்கப் பகுதியினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்போது பெருமளவு வீடியோ டெக்குகளையும், பொலியஸ்ரர் துணிகளையும் கடலில் எறிந்த கடற்றொழிலாளர்கள் தமது படகுகளில் தப்பியோடிவிட்டார்கள். (பி)

தற்கொலை

(கொழும்பு)

அநுராதபுரம் கஜபாகு ஓராணுவமுகாமைச் சேர்ந்த ஒரு இராணுவ வீரர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இல்லதரசிகளின்
சிறந்த தெரிவு
றேயல்
கோப்பர்
சிவா இணடஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13

மணிவாக்கு

ஓ மனிதனே! வானம் வந்தாலும், பூமிவந்தாலும் ஆட்சிசெய்யக் கருதாதே சாட்சியாயிரு; மாட்சிஉன் பிறப்புரிமை.

— சிவயோகசுவாமிகள்

நமது நோக்கு

நாற்பது வருடநாடகம்

அணு ஆயுதப் போரி லிருந்து அகில உலகையுமே காப்பாற்ற வேண்டுமென்ற பெருமுயற்சி இன்று நாற்பது வயதைப் பூர்த்தி செய்கின்றது.

வெற்றியா தோல்வியா என்ற கேள்வியை இன்றைய உலக விவகாரங்களைச் சற்றேனும் விளங்காத அப்பாவிகளே கேட்பார்கள்.

வருகிற நவம்பரில் ஜனாதிபதி றீகனும் சோவியத்தலைவர் கொர்பாச்சோவும் இதற்கு ஒருமுடிவு காண்பர் என்ற ஆசை உலகைப் பிடித்திருக்கிறது.

1945 - ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் தேதி ஹிரோஷிமாவில் போடப்பட்ட குண்டு எத்தகையது என்று இன்று நினைத்துப்பார்ப்பது நல்லது. அக்குண்டின் அட்டூழியத்தில் தப்பி இருந்த மணிக்கூடு ஒன்று காலை 8 மணி 16 நிமிடத்தில் நின்று விட்டது.

மனிதவரலாறு அம் மணிக்கூடு குறிப்பிட்ட நேரத்தில் முடிவடைந்தது போல் அது காட்சியளித்தது.

எனவே உலகை முற்றாக அழிக்கவல்ல அணுக்குண்டு தனது முதற்தாக்குதலை 1945 - 8 - 6 காலை 8-15-ல் ஆரம்பித்திருக்கிறது.

ஹிரோஷிமாவை முற்றாக அழித்ததோடு, அங்கு தப்பி ஓட்டி இருந்த மனிதரின் அதோகதி என்ன என்பதை கடந்த 40 வருடமாக நாம் பத்திரிகையிலும் படத்திலும், புத்தகங்களிலும் வானொலியிலும்,படித்து வருகிறோம்.

ஒருகுண்டு சுமார் 40 நொடியில் நிறைவேற்றிய சாதனை; ஜப்பானை முறியடிக்க, இரண்டாவது யுத்தத்தை முடித்து வைக்க உதவியது

இன்றைய நிலைமை என்ன.

ஹிரோஷிமா குண்டைப் போல் பன்மடங்கு - சில குண்டுகள் ஆயிரம் மடங்கு-இன்று ஐம்பதினாயிரம் உலகில் உண்டு என்று சொல்லப்படுகிறது.

நாற்பது வருடத்துக்கு முன் இதனைச் செய்த மாமனிதர், உலக சமாதானத்துக்கு இது உதவும் என்று நினைத்தனர்.

இதில் உண்மையில்லாமலில்லை. 50,000 குண்டுகள் செய்யப்பட்டன. உலக யுத்தம் மப்பு மந்தாரத்துடன் இருந்ததல்லாமல் மழையாகப் பெய்யவில்லை.

வானம் இந்தக் கோலத்தில் நீண்டகாலம் இருந்த போதும், மழைவரா தென்று குடைகொண்டு போகாதவரின் பகுத்தறிவு எத்தன்மையது?

எனவே அணுஆயுத உற்பத்தியை நிறுத்தவேண்டும். செய்யப்பட்ட குண்டுகளை வெடிக்கவைத்து உலகின் பாதுகாப்புக்கு உறுதி பண்ணப்பட வேண்டுமென்று வாதாடும் உலகம் பித்தாகூட்டமா?

1945ல் இத்தனையகுண்டு தேவைப்பட்டிருக்கலாம். ஐந்து லட்சம் அமெரிக்க உயிர்களைப் பாதுகாப்பதற்கு அக்குண்டே ஒரு வழியென்று கருதப்பட்டது.

அக்கால விடயத்தை இன்று மறுபரிசீலனைசெய்து சரிபிழை கூறுவது மடமை என்று கொள்ளும் மூடர்கள் இன்றும் உண்டு.

அதுமட்டுமல்ல அணு ஆயுத ஒழிப்பு இயக்கம் எங்கு தீவிரமடைகிறதோ அங்கெல்லாம் அது தம் யூனிஸ்ட்டுகளுடைய 'ஸ்டன்ட்' என்றும் சொல்லப்படுகிறது.

நல்லகாலம், அமெரிக்காவிலேயே அந்தக் குண்டின் தாக்குதலை அனுபவித்து சொல்லொணாத் துயருக்கு வாழ்க்கை முழுதும் ஆளான வர்கள் அணுக்குண்டு ஒழிப்பு இயக்கங்களை வளர்த்து வருகின்றனர்.

ஒருயுத்தம் தீவிரமடைகிறது, ஒருகோடி மக்கள் சிலநிமிடங்களில் நீறும் சாம் பலுமாகப் போகின்றனர். இதனைத் தடுக்க ஒரே ஒரு வழி என்று ஒருசிறு அணுக்குண்டை இந்த யுகத்துக்கு ஆதரித்தம் செய்கின்ற சிலர் வாழும் நகரத்தில் போடலாமா?

எங்கள் நாட்டை இந்தக் குண்டு எட்டிப்பார்க்கவில்லை. அண்டைநாடாகிய இந்தியா இக்குண்டு பாகிஸ்தானில் உருப்பெறுகிறதென்று அஞ்சுகிறது; வேண்டுமானால் தானும் ஒன்றைத் தயாரிக்க நேரிடுமென்கிறது.

அணுக்குண்டை நேரில் தரிசிக்க வேண்டிய அவசியமில்லை. இன்று எங்கள் நாட்டின் வடபகுதியில் வல்வெட்டித்துறை, நயினாதீவுக்கடற்பாதை வடமத்தியில் அனுராதபுரம் என்பன என்ன சொல்கின்றன?

எந்த ஒரு காரணத்துக்கும் அப்பாவி மனிதனை எவனையும் கொல்லுவது மாபாதகம்; நாகரிக அழிவு என்பதை உறுதியாகக் கொண்டால் ஹிரோஷிமாவுக்கு இடமேது.

அமெரிக்கதேச வரலாறு மிக மேன்மையானது; அதற்கு என்றும் அழியாவடு ஹிரோஷிமா! சோவியத் ரஷ்யா எவ்வித 'சர்க்கிஸில்' ஈடுபட்ட போதும், 'அணு ஆயுத ஒழிப்புக்கு' றீகனின் 'நட்சத்திரப்போர்' ஒருமருந்தாகாது என்று அகில உலகம் நம்புமெனில் நமக்கு ஜயமில்லை.

நாற்பது வருட நாடகம் ஒழிய நடிகர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென இன்றையதினத்தில் பிரார்த்திக்கின்றோம்.

சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

திருமதி லீலாவதி இராமநாதனின் ஞாபகார்த்த சொற்பொழிவு இம்மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். பல்கலைக் கழக கலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் கலாசநாதக்குருக்கள் இந்த ஞாபகார்த்த சொற்பொழிவை நிகழ்த்துவார்.

"பெயர், புகழுக்காக மட்டும் 'லயன்ஸ்'ல் சேரக்கூடாது"

[மாவிட்டபுரம்]

"பெயருக்கும், புகழுக்குமாவும் மட்டும் லயன்ஸ் கழகத்தில் அங்கத்தவர்களாக சேர்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை. லயன்ஸ் கழகத்தில் அங்கத்துவம் பெறுவோர் தமது சமுதாயம், கிராமம், நாடு ஆகியவற்றுக்காக முழுமையான சேவையில் ஈடுபட வேண்டும். அப்போது தான் லயன்ஸ் கழகத்தின் நோக்கம் நிறைவேற முடியும்"

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழக புதிய அலுவலர்கள் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து பதவிஏற்பு வைபவத்தை நடாத்திவைத்த வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவரும், லயன்ஸ் பிரிவு 7 (1) ன் தலைவருமான டாக்டர் ரி. பகீரதன் கூறினார்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் திரு. ஆர். மனோகரன் தலைமையில் மாவிட்டபுரத்தில் நடந்த இவ் வைபவத்தில் லயன்ஸ் கழக மாவட்ட ஆலோசகர் திரு. கே. குணரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, லயன்ஸ் கழக தலைவர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்

தலைவர் திரு. ஆர். மனோகரன் தமதுரையில்:

"மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் பல்வறு இடையூறுகள் மத்தியிலும் சிறப்பாக சேவைசெய்து வந்ததோடு ஆஸ்பத்திரி சேவைக்காக 84/85-ம் ஆண்டிற்கான சிறந்த விருதையும் பெற்றுள்ளது" என்று குறிப்பிட்டார்.

புதிய தலைவர் திரு; ஏ. வி. சர்மா பேசுகையில்:

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றி வருமெனவும், வறிய கண்பார்வை யற்ற மக்களுக்கு இலவச கண் ணு டி க ளை வழங்கவும், மாவிட்டபுரம் பாடசாலையில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கவும் ஏற்கனவே நடைபெறும் குடிதண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்யவும் மாவிட்டபுரத்தில் ஓர் நூலகம் அமைக்கவும் பணம் பொருட்களின் உதவியை ஊக்குவிக்கவும், விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனவும் கூறினார்.

கழகச் செயலாளர் லயன் எஸ். ஜெகதீஷனின் நன்றியுரையும் இடம்பெற்றது.

பிரிவுபசாரம்

[வவனியா]

வவனியா - மதியாமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த ஐந்து வருடங்கள் அதிபராக சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி ப. செல்லத்துரைக்கும், ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றி இடம்மாறிச்செல்லும் செல்வி மகிழ்நினி சுந்தரலிங்கத்திற்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரால் பிரிவுபசாரவிழா அண்மையில் நடாத்தப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் காலமானார்

[லக்னோ]

உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் பனார்ஷிதாஸ் நேற்றுமுன்தினம் காலமானார்.

"பத்திரிகைகள் சிந்தனையைத் தூண்டவேண்டும்"

(கல்வியங்காடு)

"சிலதகவல்கள் மூவம் சிந்தனையைத் தூண்டிவிடப் பத்திரிகைகள் உழைக்கவேண்டும்." என்று அரியாலையில் வெளியிடப்பட்ட 'அறிவாளி' வார வெளியீட்டு விழாவில் பேசிய போது வித்துவான் க. சொக்கலிங்கம் கூறினார்.

'அறிவாளி' கலவட்டத்தின் தலைவர் திரு. எம். மனுவல் தலைமையில் விழா நடைபெற்றது. திரு. சொக்கலிங்கம் மேலும் பேசுகையில், "அரியாலை பல கலைஞர்களை எழுத்தாளர்களைக் கொண்டது. இவ்விடத்திலிருந்து 'அறிவாளி' பத்திரிகை வெளிவருவது போற்றத்தக்கது" என்றார்.

அரியாலை காந்தி சனசமூக நிலையக் கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. எம். எஸ் அலெக்சாண்டர், கனகரத்தினம் ம. ம. வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம், யாழ் கல்வித் திணைக்கள நிதி உதவியாளர் திரு. செ. துரைசிங்கம், சட்டத்தரணி இராஜ இராஜஸ்வரன் தங்கராஜா, ஈ. கே. குமரையா உட்பட்ட பலரும் பேசினர்.

பத்திரிகையை, கலாநிதி சு. மோகனதாஸ் வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. எல். யோசப் பெற்றுக்கொண்டார். திரு. ஈ. அரசகேசரி நன்றி தெரிவித்துப் பேசினார். திரு. அ. மங்களநேசன் பதிலுரை வழங்கினார்.

கடலிலிருந்து கரைநோக்கி...

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள முள்ளியான் என்னுமிடத்தில் நேற்று அதிகாலை தொடக்கம் கடலில் இருந்து கரையை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதன் எதிரொலியாக அப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் பீதியுடன் இருந்தனர். மீனவர்கள் எவரும் நேற்றுக் காலை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

அதேவேளை பருத்தித்துறை கிழக்கு கடற்பிரதேசத்தில் மீனவர்கள் தொடர்ந்து இம் சிக்கப்படுகின்றனராம் தொழிலுக்கு செல்லும் மீனவர்களின் "அவுட்மோட்டர்" இயந்திரங்களைப் பறித்து கடலுக்குள் வீசுவதாகவும் மீனவர்களைப் பயமுறுத்தி தாக்குவதாகவும் முறையிடு கிறார்கள்.

அநுராதபுரம் வன்செயல்
பாதிக்கப்பட்ட ஆசிரியர்க்கு சேவைக்கால லீவு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

'அனுராதபுரத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயலின்போது இடம்பெயர்ந்து தமது கடமைகளுக்கு மீண்டும் திரும்பாத சகல ஆசிரியர்களுக்கும் சேவைக்கால லீவு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்று கல்வியமைச்சு உறுதியளித்திருப்பதாக, இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஸ்ராண்லி வித்தியாலயத்தில் பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கூட்டமொன்றில் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

இவைதொடர்பாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு எம். எஸ். செல்லச்சாமியும், தாமும் கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபொழுதே மேற்குறிப்பிட்ட இரு உறுதிகளையும் கல்வி அமைச்சர் அளித்ததாகவும் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

அனுராதபுரத்துக்குப் புதிதாக நியமனம் பெற்று, தற்போது முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளுக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்ட கல்வி அமைச்சர், கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. க. ஜெயக்குமார், கிளிநொச்சி முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் ஆகியோருக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

மற்றும் சங்கத்தின் உதவிச் செயலாளர் திரு. கு. தேசவன், அமைப்பாளர் திரு. குணசேகரம், திரு. நவரட்ணம், திரு. பாஸ்கரன் திரு. விநாயகலிங்கம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். [பி]

பரந்தன் நகரக்கழக தலைவர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் நகரக்கழகத்தின் புதிய தலைவராக சி. சாந்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கழக உதவித் தலைவராக பி. எஸ். மூர்த்தியும், செயலாளராக ஆசிரியர் ம. பத்மநாபனும் பொருளாளராக எஸ். சிவதாசனும், இளைஞர் சேவை இயக்குனராக ஆசிரியர் இ. பி. மரியதாசனும் செய்தொழில் சேவை இயக்குனராக எஸ். சிவகுருநாதனும், சமூகசேவை இயக்குனராக எஸ். எஸ். செல்லையாவும் சர்வதேசஇயக்குனராக டாக்டர் என். ஸ்ரீதரனும் பத்திராதிபராக அதிபர் எஸ். எஸ். தர்மரெத்தினமும் எதிர்காலத் தலைவராக எஸ். செல்லையாவும் நிர்வாகிகள் தெரிவின் போது தெரிவுசெய்யப்பட்டனர். ப வை. ஜெயபாலன் தலைமையில் மேற்படி தெரிவு நடைபெற்றது.

பொங்கல் விழா

[மாவிட்டபுரம்]

தையிட்டி கணயில் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல்விழாவும் சுவாமி தெருவீதியுலாவும சிறப்பாக நடைபெற்றது.

காலை அபிஷேக ஆராதனைகளும், மாலைதெருவீதியுலாவும் இரவு பொங்கல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இருபாலைச் சந்தியில் உள்ள சைக்கிள் கடை ஒன்றில் உதவியாளராக வேலைசெய்து வந்த இளைஞர் ஒருவர் கடந்தமாதம் 29-ம் திகதி முதல் காணமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த எஸ் யேசுராசா (17 வயது) என்பவரே காணமலி போனவராவார்.

(மா)

இன்று மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பஸ்தரிப்பில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான மூவரின் மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இன்று நடைபெறும்.

இன்று பிரேத பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

இச்சம்பவத்தில் ஒரு வயோதிபர் உட்பட 3 பிரயாணிகள் பலியானார்கள். (ச)

இராணுவ வீரர் கடத்தல் தகவல் இல்லை

(வவுனியா)

வவுனியாவில்வைத்து இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட இராணுவ வீரர் நிமால் ஜயவர்த்தனா பற்றி எதுவித தகவலும் இல்லை.

இக்கடத்தல் விஷயம்தொடர்பாக மர்மமாகவே உள்ளது.

இதே நேரத்தில் சிலர் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

'உயர் கல்விக்கு ஆங்கிலம் அவசியம்'

(யாழ்ப்பாணம்)

"ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் இன்று மக்கள் மத்தியில் மிக உணரப்பட்டுவருகின்றது. உயர் கல்விக்கும் வேலை வாய்ப்பிற்கும் ஆங்கிலம் மிக முக்கியமான ஒன்றாகும்

இவ்வாறு யாழ்ப்பாண இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் திரு. மு. கனகரத்தினம் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற மதிய போசன வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பழக வேண்டும் என்றும் தற்காலகல்வி நெறியானது காந்திமகான்காட்டிய சர்வோதய கல்வியடிப்படையில் அமைய வேண்டும். என்றும் சிறந்த வாழ்க்கை நெறியைஅமைப்பதற்கும் மனிதன்பூரணத்துவம்பெறுவதற்கு கல்வியின்றியமையாதது என்றும் கூறினார்.

இவ் விழா செல்வன் சோ. ஸ்கந்தமணி தலைமையில்நடை பெற்றது.

கல்லூரி அதிபர் திரு. எம் சிவலிங்கரட்ணம் கல்லூரியின் வளர்ச்சி பற்றி குறிப்பிட்ட தோடு எதிர் காலத்தில் கல்லூரியிலிருந்த அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்காக தெரிவாவார்கள் என்று தாம் நம்புவதாகக் கூறினார்.

பொலனறுவையில் மஞ்சள் கொடிகள்

(பொலனறுவ)

திருகோணமடு என்ற இடத்தில் பௌத்தபிக்குவும் அவரது சிடர்களும் இருவரும் கொலையுண்டதற்கு அஞ்சலி செலுத்துமுகமாக பொலனறுவ நகரில் மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

பொலனறுவைக்கும் திருகோணமலைக்கும் இடையில் இந்த இடம் இருக்கிறது.

நயினை நாகபூஷணி துணை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

அறிவித்தல்

1. மேற்படி கோவிலில் தினசரி இடம்பெறும் கீழ்க் குறித்த நாலுகால நித்திய பூஜைகளுக்கும், ஒவ்வொரு நித்திய பூஜைக்கும் ஒருவர் என்ற அடிப்படையில், உபயகாரர்களை நியமிக்கக் கோவிலின் அறங்காவலர் சபை முடிவு செய்துள்ளது:-

(அ) காலைப்பூஜை	காலை 7-00 மணி
(ஆ) உச்சிக்காலப்பூஜை	பகல் 12-00 மணி
(இ) சாயரட்சை பூஜை	மாலை 6-00 மணி
(ஈ) அர்த்த ஜாமப்பூஜை	இரவு 8-00 மணி

(பூஜை நேரங்கள் அறங்காவலர் சபை முடிவின்படி மாற்றப்படக்கூடியன.)

2. ஆங்கிலக் கலண்டரின்படியுள்ள ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு காலப் பூஜைக்கும் இதிற்றிட்டப்படி உபயகாரர்கள் நியமிக்கப்படுவர். முக்கியமாகத் தமது பிறந்த நாள் அல்லது தமது மதிப்புக்கும் அன்பிற்கும் உரியோருடைய பிறந்த நாட்களில், தவறாமல் காலை காலமும் அம்பிகைக்குப் பூஜையாற்றிப் பிரசாதம் பெற விரும்பும் அடியார்களுக்கு இதிற்றிட்டம் வாய்ப்பாக அமையும் என நம்புகிறோம்.

3. ஒரு காலப் பூஜைக்கு ரூபா 50/- (ஐம்பது ரூபா மட்டும்) உபயகாரர் சந்தாப்பணமாக அறவிடப்படும். இப்பணம் வருடாந்தம் பூஜைத்திகதிக்கு 30 நாட்களுக்கு முன்னரே கோவிலில் செலுத்தப்பட்டு பற்றுச்சிட்டுப் பெறப்படவேண்டும்.

4. இதிற்றிட்டத்திற் பங்குகொள்ள விரும்பும் அடியார்கள் கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ள விபரங்களை அனுப்பிப் பதிவு செய்துகொள்ளலாம். தங்கள் விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 5/- (ஐந்து ரூபா மட்டும்) தபாற்கட்டளை மூலமாக அனுப்பப்படவேண்டும். (தபாற் கட்டளையில் "பணம் பெறுவோர் பெயர்" என்ற கூட்டில் "பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்" என்று குறிப்பிடவும்.)

5. விண்ணப்பப்படிவம் தேவைப்படுவோர் சொந்த முகவரி எழுதிய 60 சத முத்திரை ஒட்டிய கடித உறையினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
அறங்காவலர் சபையின் பணிப்பின்படி,

வ. இ. க. இரத்தின சபாபதி, (J. P.) செயலாளர்

திருமதி வி. நடேசமூர்த்தி (நிறைவேற்று அலுவலர்)

அறங்காவலர் சபை,

நித்திய பூஜை உபயகாரராக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்

1. எந்த மாதத்தில் வரும் நாளில் நித்திய பூஜை உபயம் செய்ய விரும்புகிறீர்கள்? .....
(தயவுசெய்து ஆங்கில மாதத்தைக் குறிப்பிடவும்; உ—ம் ஜனவரி.)

2. குறித்த மாதத்தின் எத்தனை திகதியை விரும்புகிறீர்கள்? .....

3. விரும்பும் பூஜை வேளை? (உ—ம் காலைப்பூஜை).....

4. குறிக்கப்பட்ட பூஜை வேளைக்கு ஏற்கனவே வேறொருவர் நியமிக்கப்பட்டிருப்பின், இதே நாளில் வேறு பூஜை வேளையையோ அல்லது இதே மாதத்தில் வேறு நாளையோ நீங்கள் ஏற்கத் தயாரா?.....

5. அப்படியானால் அத்தகைய நாளும் பூஜைவேளையும் பற்றிய விபரம்.....

6. தங்கள் முழுப்பெயரும் தபால் முகவரியும் .....

7. இணைத்துள்ள தபாற்கட்டளையின் இலக்கம்.....
8. வழங்கிய தபாற்கந்தோரும், திகதியும்.....

9. விண்ணப்பதாரரி ஒப்பம்.....

(4884)

நிர்வாக சபை உறுப்பினர்கள்

(புலோலி)

புலோலி மெதடிஸ்மிஷன் தமிழ்கலவன் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் பாடசாலை அதிபர் திரு. ரீ. கெங்காதரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பின் வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர் திரு. ரீ கெங்காதரன் (அதிபர்), செயலாளர் திரு. எஸ். சற்குணானந்தம், பொருளாளர் திருமதி எஸ். வரதராஜா, நிர்வாகசபை அங்கத்தவர்கள் திரு. எஸ். பேராசிரியன், திருமதி பி பத்மநாதன், திரு பீ. கனகசபை திரு ஏ. இரவீந்திரன், திருமதி எஸ். பூரணானந்தன், திரு கே. அரசரத்தினம், செல்வி பீ கமலாதேவி கணக்குப் பரிசோதகர் திரு. வி. கோபாலகிருஷ்ணர். (ச)

'கந்தவேள் கோட்டம்' 'ஈழநாடு' வாசகர்களுக்கு மிக நெருக்கமான பிரபல எழுத்தாளர் தரும் அடுத்த தொடர்— 'கந்தவேள் கோட்டம்'

ஈழத்தின் புகழ்பெற்ற நல்லூர்க் கந்தவேள் ஆலயத்தின் ஆக்கல், அழித்தல், காத்தல் நிலைகளை விபரிக்கும் வரலாற்றுப் புதினம்! தெரிந்த களத்தில் புதிய செய்திகள்! யாழ்ப்பாண இராச்சியத்தின் இருள் சூழ்ந்த காலகட்டத்தினையும் அக்காலகட்ட விடுதலை மலர்ந்த பொற்காலத்தையும் சித்தரிக்கும் ஓவியம்.

எதிர்பாருங்கள்!

"மாணவர்கள் மத்தியில் ஐக்கியம் வேண்டும்"

(கிளிநொச்சி)

"மாணவர் ஆசிரியர் மத்தியில் பரஸ்பரம் ஐக்கியமும் நல்லுறவும் நிலவ வேண்டும், ஒழுக்க சீலர்களான சமுதாய மொன்றைக் கட்டி எழுப்பும் பெரும் பணி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்உண்டு.

இவ்வாறு வட்டக்கச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த தேனீர் விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் வித்தியாலய அதிபர் திரு. வி. வேலாயும் குறிப்பிட்டார்.

செல்வி தேவிகா சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்துபசார வைபவத்தில் அதிபர் வேலாயுதம் மேலும் பேசுகையில், "பாடசாலைகளில் மாணவர் மன்றங்கள் இயங்குவதன் மூலம் பல நன்மைகளை மாணவர்கள் பெறமுடியும் மாணவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துணரவும் மற்றவர்களுடன் கலந்து பேசவும் மேடைக்குரிய பழக்க வழக்கங்களைப் பெறவும் பல்கலைக்கழகம் சென்று அச்சூழலுக்கேற்ப வாழவும் மாணவர் மன்றங்கள் துணை புரிகின்றன என்றார்

சகலரும் விழிப்புடன் இருந்தால் கல்லூரி கல்வித்துறையில் வளர்ச்சியுற முடியும்"

(மானிப்பாய்)

"கல்வித்துறையில் ஏற்படும் புதியமாற்றங்களை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற கல்வியைத் தமதுபிள்ளைகள் பெற்று வருகின்றார்களா எனபதைக் கண்காணித்துக் கொள்வதற்கும் ஆசிரியர் பெற்றோருக்கிடையே நல்ல ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதற்கும் பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச்சங்க கூட்டங்களில் கலந்துகொள்வது அவசியம்" இவ்வாறு யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு எஸ் சிவசரவணபவன் இக் கல்லூரியின் அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமைஉரை நிகழ்த்துகையில் எடுத்துக்கூறினார்.

திரு சிவசரவணபவன் மேலும் பேசுகையில் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர் ஆகியோர் விழிப்புடன் இருந்தால் நிச்சயம் கல்லூரி கல்வித்துறையில் வளர்ச்சிபெறமுடியும் இதற்கு ஏதோபித்த ஒய்வில்லாத ஒத்துழைப்புத்தேவை என்றார்

சிறப்புவாய்ந்த கல்லூரியான வைத்தீஸ்வரா வித்தியாலயம் முந்திய சிறப்பினை மீண்டும் பெற்றுத் தொடர்ந்து வளர எல்லோரும் முன்வந்து ஒத்துழைப்புத் தரவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

சமீபத்திய காலங்களில் பொதுப்பரீட்சைகள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் போது இடையூறுகள் ஏற்படாதவாறு பெற்றோர் பழைய மாணவர்பாதுகாப்புஅளித்தது போல் இம்முறையும் பாதுகாப்புஉதவி வழங்க முன்வரவேண்டுமெனவும் அவர்வேண்டுகோள் விடுத்தார்.

புதிய காரியதரிசி திரு என். ஜோதிசன் நன்றி கூறினர்.

இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படியும், இந்நடவடிக்கைகள் பொதுமக்களைத் துன்புறுத்தாத வகையில் இருக்க வேண்டுமெனவும் இணைப்பதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் சகல பகுதிகளிலும் சட்டம், ஒழுங்கை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி இணைப்பதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் மகாநாடு நடைபெற்றது.

305 வடபகுதி ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகேந்திரம் என்னும் இளம் ஆசிரியரை அவரது தாயார் பொறுப்பேற்றுக்கொள்ள யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார். இவர் மட்டக்களப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டவர்.

விடுவிக்கப்படுபவர்களில் ஒரு பகுதியினர் தமதுசொந்த இடத்திலும், மற்றைய பகுதியினர் சொந்தமல்லாத மாவட்டங்களிலும் வசிக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவித்திருந்தது தெரிந்ததே. (மா)

திருத்தம்

இருபாலையில் நகை அடைவுகடை உரிமையாளர் வீட்டில் இடம் பெற்ற கொள்ளை தொடர்பாக நேற்றைய செய்தியில் 'கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில்' என்பது கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும் என தவறுதலாக வந்துள்ளது. அத்துடன் இயக்கத்தினர் பற்றிய சில வசனங்களும் தவறுதலாக வெளிவந்துள்ளன.

இலங்கைத்தரசிகளின் சிறந்த தெரிவு
ரோயல்
பேக்கிங் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

மதவாச்சி பகுதிமக்களுக்கு இராணுவ பாதுகாப்புதேவை!

மாவட்ட அமைச்சரிடம் கோரிக்கை

(மதவாச்சி)

தீவிரவாதிகளின் தாக்குதலி லிருந்து மதவாச்சியைப் பாதுகாப்பதற்கு தற்காலிக இராணுவமுகாம் ஒன்றை இங்கு அமைக்குமாறு, மதவாச்சியில் வாழும் சிங்கள மக்கள் அரசிடம் கோரியுள்ளனர்.

மதவாச்சி பூனுவ மகாவித்தியாலயத்தில் அனுராதபுரம் மாவட்ட அமைச்சர் திரு சந்திர பண்டார தலைமையில், மதவாச்சி பாதுகாப்பு தொடர்பாக நடந்தகூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கை விடப்பட்டது.

இதுபற்றி அரசின் கவனத்திற்குகொண்டு வருவதாகஅனுராதபுர மாவட்ட அமைச்சர் உறுதியளித்தார்

இராணுவமுகாம் ஒன்று அமைக்கப்படும்வரை இராணுவ பொலிஸ் கூட்டு ரோந்து சேவையை உடன் நடத்த ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பலரி பாதுகாப்பிற்காக தங்களுக்கு மேலும் துப்பாக்கிகளும், தோட்டாக்களும் வழங்குமாறு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

சாதாரண விதித்தடைகள் ஏற்படுத்துவதன் மூலம் போதுமான பாதுகாப்பை வழங்கிவிடமுடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும், இப்பகுதி மக்களுக்கு முழுப்பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மதவாச்சி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட பின்னர், இப் பகுதி மக்கள் தங்களுக் கிடையே, பாதுகாப்பிற்காக, ஊர்காவல் படையை அழைத்துள்ளனர் என்றும் தெரிவித்தார். (க)

இளம் பெண் தற்கொலை

(மாவிட்டபுரம்)

தனது தாயாரை இழிவுபடுத்திப் பேசியதை பொறுக்க முடியாது 17 வயது யுவதி ஒருவர் நஞ்சருந்தி உயிரைப்போக்கிக் கொண்டார்.

சிறுவிளாங்கேச்சேந்த நாகராசா நாகேஸ்வரி என்பவரே இவ்வாறு உயிரைப் போக்கிக் கொண்டவராவார்.

தமது பேரனுடன் வசித்து வந்த காலமானவர் பேரனின் வீட்டில் இடம்பெற்ற திருமண பேச்சு ஒன்றின்போது காலமானவரின் தாயார் அவருக்குக் கொடுக்கப்பட்ட சீதனத்தை செலவளித்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் காலமான யுவதிக்கும் தானே சீதனம் கொடுத்து திருமணம் செய்ய வேண்டியுள்ளதாக பேரனர் பிரஸ்தாபித்ததால் காலமானவர் மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது:

காலமானவரின் பேரனர். வல்லிபுரம்அப்புத்துரைதாயார் சரஸ்வதி தேவி தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை வைத்திய அதிகாரி கனகமலர் ஸ்ரீகாந்தா ஆகியோரி சாட்சியமளித்தனர்

மரண விசாரணையை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி நா தம்பிராசா விசாரணைமுடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

பெரியவிளான் கிராமசேவையாளர் சி. கந்தசாமி விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

சைவ ஆர்வலர்

பிறர்நலம் கருதிப் பணியாற்றித் தர்ம கைங்கரியங்களில் ஈடுபடுபவர்கள் மக்கள் மனதிற் பசுமையான எண்ணங்களைவிட்டுச் செல்வார்கள். இலங்கை, மலேசியா வாழ் சைவமக்கள் மனதில் என்றும் பசுமை பெறும் அரும்பெரும் சமயப்பணிகளை ஆற்றிய பெருமை அமரர் வீர. சோமசுந்தரத்திற்கு உரியது.

சங்கானை வெள்வில் அருள்மிகு முருகமூர்த்தி கோவிலுக்கும் பெருந்தொகைப் பணம் வழங்கி இராஜகோபுரம் ஒன்று அமைத்தார். இருவகையில் மக்கள் கோபுர தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெற அல்லும் பகலும் ஆற்றிய தொண்டு மகத்தானது.

மலேசியாவில் சைவத்தின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திய பெருமையும் இவருக்குஉண்டு. மலேசியா ஸ்ரீ பராசக்தி அம்மன் கோவில் நிர்வாக சபை, இலங்கைத் தமிழரி கலாவிருத்திச் சங்கம், அருள்நெறித் திருக்கூட்டம், பேரனி அபிவிருத்திச்சங்கம் ஆகிய அமைப்புகள் அன்னரின் முயற்சியாலும், திறமையாலும் நன்கு செயற்பட்டன.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் கச்சியப்பர் கருத்துக்கு ஏற்பவும், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் திருமூலர் கூற்றுக்கு இணங்க வாழ்ந்து பசுமை நினைவுகளை விட்டு அமரவாழ்வு எய்தியவர் வீர. சோமசுந்தரம் என்பது மிகையல்ல.

இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—22(1985-8-6) செவ்வாய்
திதி—ஷஷ்டி
நக்ஷத்திரம்—ரேவதி பின் இரவு வரை

மேடம்:- பொழிளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் தென்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் ஆபத்துக்கு இடமுண்டு.

இடபம்:- ஆனவப்போக்கினால் அடிசறுக்கு நேரிடும் குடும்பத்திலும் கிறிய பூசலுக்கு இடமுண்டு. வயது முதிர்ந்த பெண் மூலம் அவப்பெயருக்கும் இடமுண்டு.

மிதுனம்:- தன்மான வாழ்வுடன் தனமுடமை சேரும். தாயின் ஆதரவும் தவறுது கிடைக்கும். முயற்சி செய் முன்னேற்றமுண்டு.

கடகம்:- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு.

சிங்கம்: அதிகாரகுறைவுக்கு இடமுண்டு அபாயகரமான தொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும். அவசர நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி:
ஆனந்தமயமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். கணவன் மனைவி உறவுமுறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும்.

துலாம்: சூழ்ச்சிவலை பின்னும் அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான செய்திக்கும் இடமுண்டு.

விருச்சிகம்; உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது பதியும். எதிர்பாராத வரவுமுண்டு.

தனுசு; எதிரி மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும். உணவுவிடுதி நடத்துபவர்களுக்கு உற்சாகமானதினம்

மகரம்:- முயற்சியால் உயர்ச்சிஉண்டு பணிவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். இன்று சுகபோகதினம்.

கும்பம்:- கருடப் பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராத வகையில் பொருள் செலவுக்கு இடமுண்டு.

மீனம்:- கவலைகளின் தாக்கு தலால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் பாதிக்கப்படும். அமைதி வேண்டும்.

திருமலை

– வே. ரவீந்திரன் –

இல்லத்தரசிகளின்
சிறந்த தெரிவு
ரோயல்
ஜெலி கிறிஸ்டல்ஸ்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

இப்படியும் நடக்கிறது

இது ஒரு குட்டிக்கதை. ஆனால் கற்பனையல்ல.

யாழ்ப்பாணத்து வருமானவரி பிராந்திய பணிமனையில் கடமையாற்றும் ஓர் ஊழியர் கொழும்பில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெற இருந்த ஓர் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கொழும்பு சென்றார்.

தற்போது ஒருவர் கொழும்பு செல்வதென்றால் "அலுவல்கள்" அதிகமிருக்கும் என்பதை நான் கூறத்தேவையில்லை. அலுவலரின் வெளிநாட்டுக்கடிதங்களோ கொழும்பில் அஞ்சுகபெட்டியில் போடுவது, உறவினர் நண்பர்களின் 'பாஸ்போர்ட்' அலுவல்கள், பென்சன் அலுவல்கள், "ரிக்கற்புக் பண்ணுவது" இப்படி எதுவோ அலுவல்களை "அந்த" கொழும்பு செல்பவர் சமாளிக்க வேண்டும்

கொழும்பு சென்றவையோடு விதவைகள், அநாதைகள் ஒய்வூதியக்காரியாலயத்திற்குள் நுழைந்து அலுவல்களைக் கவனித்துவிட்டு வெளியே வந்தாரோ... பொலிசாரிடம் 'வசமாக" மாட்டிக் கொண்டார். காரணம் .....? விதவைகள் ஒய்வூதியக் காரியாலயம் அமைந்துள்ள பகுதி ஜனதிபதி காரியாலயத்துக்கு அருகே இருந்ததுதான்.

குறிப்பிட்ட ஊழியரிடம் அவர் கொழும்புக்குச் சென்ற காரணத்துக்கான அத்தாட்சிகள் குறித்த கேந்திர நிலையத்துக்குள் பிரவேசிக்கக்காரணமான கடிதம் தேசிய அடையாளஅட்டை போன்ற எல்லாச் சான்றுகளும் இருந்தும் எதுவுமே பொலிசாருக்குத் தேவைப்படவில்லை. அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

வருமானவரித்திணைக்கள அதிகாரிகள் தகவல் கிடைத்து நேரில் சென்று, அடையாளம் காட்டி அவ்வூழியரை விடுவிக்குமாறு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பயன் பூஜ்யமே.

அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு "போலி அடையாள அட்டை" வைத்திருந்தாராம்.

அடுத்தநாள் நீதிமன்றத்தில் அவருக்கெதிராக "குற்றப் பத்திரம்" கொடுக்கப்பட்டது. வெறுமனே "சந்தேகநபர்" என்ற குற்றம் சுமத்தபடவே பிணையில் வெளிவர நீதிமன்றம் அவருக்கு அனுமதி வழங்கியது. வெளி உலகுக்கு தெரியாமல் இப்படி எத்தனை சம்பவங்கள்...

"ஊடுருவி"

கம்பஹாவில் பலத்த பாதுகாப்பு

(தொழும்பு)

கம்பஹாப் பகுதியில் இம்மாதம் 'ஈரோஸ்' இயக்கத்தினர் தாக்குதல் நடத்தலாம் என்று அரசாங்கம் கருதுவதினால் இப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கம்பஹா மக்கள் எவரும் அஞ்சத்தேவையில்லை என்று கம்பஹா நகர சபைத் தலைவர் திரு கே.எல். ஏ வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் கம்பஹாவில் தாக்குதல் நடத்தலாம் என்று அப்பகுதியில் பரவலாகப் பேசப்படுவதினால் இப்பகுதி மக்கள் பலத்த அச்சத்துடன் இருந்துவருகிறார்கள். இதனைச் சுட்டிக்காட்டடி இப்பகுதி மக்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவேண்டுமென்று கம்பஹா நகரசபை உறுப்பினர் திரு. ரஞ்சித் வீரதுங்க தெரிவித்துள்ளதை அடுத்து நகர சபைத் தலைவர் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதே வேளை கம்பஹா அரசாங்க அதிபர் பொலிஸாருடன் மாநாடு ஒன்றை நடாத்தி இப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

கம்பஹாப் பகுதியில் முக்கிய பகுதிகளில் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பனம்பழம் விற்பனை!

[பச்சிலைப்பள்ளி]

வவனியாவில் பனம்பழமும் விற்பனையாவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வவனியா புகையிரத நிலையவீதியில் உள்ளபழக்கடை ஒன்றில் ஏனைய பழங்களுடன் வைத்து பனம்பழமும் விற்பனையாகிறது.

ஒரு பனம்பழம் ஒரு ரூபா ஐம்பது சதமாக விற்பனையாகின்றது.

யாழ்ப்பாணத்தில் பனைகளின் கீழ் அநாதரவாகக் கிடக்கும் பனம்பழத்திற்கு, பனை மரங்கள் குறைவாகக் காணப்படும் வவனியாவில் நல்ல மவுசு கிடைத்திருக்கிறது.

ஊசி மருந்து இல்லை

(வவனியா)

வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் 'பென்சலின்' ஊசி மருந்து கடந்த நான்குமாத காலமாய் இல்லையாம்

நோயாளிகள் வெளிச்சந்தையில் இம்மருந்தினை பெற்று ஆஸ்பத்திரிக்கு செல்லவேண்டியுள்ளது.

ஆஸ்பத்திரிவட்டாரம் தெரிவித்த தகவலில் பிராந்திய மருந்தகத்தில் குறிப்பிட்ட மருந்துகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதாம்.

நேயர்களுக்கு நன்றி

மாலை
5-00 செய்திகள்
5-30 'நைட்ரைடர்' [ஆங்கிலம்]
6-00 இசை நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
7-25 'சிபஸ்' [ஆங்கிலம்]
8-00 செய்திகள் [சிங்களம்]
8-40 விளையாட்டுப் பயிற்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-10 உலகச் செய்திகள்
10-15 ஒலிபரப்பு முடிவு.

வீதியில் கிடந்த மின்கம்பி தாக்கியதில் பஸ் நடத்துனர் பலி!

(மாவிட்டபுரம்)

கடமைக்குச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச் சபை நடத்துனர் ஒருவர் வழியில் மின்சாரத்தினால் தாக்குண்டு உயிரிழந்தார்.

ஏழாலையைச் சேர்ந்த காசி நாதன் சிவகப்பிரமணியம் (44 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி நா தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்திய சமயம் சம்பவதினம் கடமையின் நிமித்தம் காலமானவர் வீட்டிலிருந்து சைக்கிளில் புறப்பட்டு கோண்டாவில் போக்குவரத்துச் சபை டிப்போவுக்குச் சென்றதாகவும் வழியில் மயிலங்காடு என்னுமிடத்தில் வீதியில் கிடந்த மின்வயரில் தாக்குண்டு மரணமானதாகவும் சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

சக ஊழியரான இராசா வைத்திலிங்கம், மனைவி சிவயோகம், தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
"SHE"
மந்திரஜாலங்கள்
குதிரை ஓட்டம் நிறைந்த
படம்

சரவணபவன்
மினி சினிமா
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
007 James Bond
Gold Finger

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30,12-30,2-30,
4-45.
I SPITON YOUR GRAVE
வயது வந்தவர்கள் மட்டும்

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
ஜெய்சங்கர்- கஜாதா-
சுரேஸ்
சிவப்பு நிலா

மொகோர்ன்
மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சகலேன்
ராஜாதியேட்டருக்கு
அருகாமையில்
Blue Lagoon-Paradise
வரிசையில் மீண்டும் ஒரு
காதல் காவியமாக
வெளியிட்டுள்ளோம்.
Love Story
தினசரி 3 காட்சிகள்

பாலகன் V V.
(சாந்தி முன்பாக)
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
LONE WOLF
MCQUADE
முதாம் தாக்குதல்
நிறைந்த சண்டைப்படம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45,
Death Hunt

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
10-30, 2-30 6-00
சிவாஜி-ஜெமினி
சாவித்திரி நடித்த
பார்த்தால் பசிதீரும்
(புதிய பிரதி)

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
சவுண்ட்மிக்ஸ் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-15
Charles Bronson
Fake-Out
(வயது வந்தோருக்கு
மட்டும்)

கஜேன்
மினி சினிமா
(சத்திரச் சந்தி
அருகாமையில்)
10.30, 2 00 6-00மட்டும்
ஹிந்தி நிரைப்பட ரசிகர்
களின் ஆவலை பூர்த்தி
செய்ய
சுப்பர் ஸ்ரார்
ரஜனிகாந் நடித்த
GANGVAA
ஹிந்தி கலர்

ஹரன் சினிமா
10-30, 2-30
ஜெய்சங்கர்—பானுமதி
மேஜர் மீனாட்சி
(புதியபிரதி கலர்)

ஹரன் மினி
தினசரி 10-30, 2-30, 6-30
M G R. சரோஜாதேவி
நம்பியார் நடித்த
கலங்கரை விளக்கம்
புதிய கொப்பி

நியூ சினிமாஸ்யா
R G. பில்டிங் (மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
5 X 5 வெண்திரையில்
சகல நவீன வசதிகளுடன்
5-8-85 குதூகல ஆரம்பம்
10-30, 2-30, 4-30, 6-30,
Battle of
Commondos
(பற்றில் ஒவ்
கொமண்டோஸ்)
அதிரடிப் படையினரின்
போர் அதிஉன்னதமான
நீர்மூழ்கிக் கப்பலின்
சாகசங்கள். உக்ரமான
அதிரடிப் படையின் தாக்
குதல்கள் நிறைந்த
உன்னத சித்திரம்
பார்க்கப் பார்க்க திகில்
யும் அச்சத்தையும்உண்டு
பண்ணும் அதி உன்னத
துரை ஒவியம்.
கண்டிப்பாக வயதுவந்த
வர்களுக்கு மட்டும்.

விஸ்ணர் (யாழ்)
Daily 10-30, 2-00,4-30,
7-00
கடைசி இரு தினங்கள்
மட்டும்
CAT PEOPLE

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
Daily 5 Shows
UNDER
FIRE
(War Film)

எம்பயர்
ஸ்கோப் சினிமா
(யாழ்-வைத்தீஸ்வரா சந்தி)
இன்று மட்டும்
10-30, 2-30, 6-00
மோகன், ரேவதி, டிஸ்கோ
சாந்தபாபு, லெட்சுமி,
சவுண்டமணி,
கலாப்பெட்டி சிங்காரம்
நடித்த
"உதய கீதம்"
(கலர்)

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.,
சரோஜாதேவி
அன்பே வா
(புதிய பிரதி)

மே(f)பெயர் மினி
சினிமா
(கல்லுண்டாய் காளிகோவில்
அருகில்)
10-30, 4 45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப்
பிறந்த ஒரு அரை உருவம்
கொண்ட பயங்கர ரகுலா
வின் திகில் நிறைந்த கதை.

உஷா மினி
(கே. கே. எஸ் வீதியில்)
10-30, 2-30, 4-30, 6-30
Under Fire
இன்னும் 2 தினங்கள்
மட்டுமே!
தவறவிடாதீர்கள்.

இல்லத்தரசிகளின்
சிறந்த தெரிவு
ரேயல்
கஸ்ரார்ட் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13

இராணுவம்-இளைஞர் நேரடி மோதல்
ஒருவர் பலி; மற்றொருவர் காயம்
9 இளைஞர் தப்பிச் சென்றனர்

[திருமலை]

திருகோணமடு விகாரையிலும் காட்டுப்பகுதியில் பிரதம குரு உட்பட 6 பேர் கொல்லப்பட்டது தொடர்பாக, பின்னர் அங்குசென்ற இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தைச் சேர்த்த எஸ். ஜோன் என்பவரை கைது செய்துள்ளனர்.

இராணுவத்தருக்கும், தீவிரவாத கோஷ்டிக்குமிடையில் நடந்த நேரடி மோதலில் மூதூரைச் சேர்ந்த நவா என்ற இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானதாகவும் கூறப்படுகிறது.

வெலிகந்தை இராணுவ முகாமிலிருந்து இராணுவ லெப்டினன்ட் தலைமையில் 8 இராணுவத்தினர், காட்டுப் பகுதியூடாக காஞ்சடையில் விகாரைக்குச் சென்றுகொண்டிருந்தபோது நேரடித்தாக்குதல் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தினர் செல்லும் வழியில் வான் ஒன்று எதிர்ப்புறத்திலிருந்து அவர்களை எதிர்கொண்டதாகவும், வானிலிருந்தவர்கள் இராணுவத்தினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இதைத்தொடர்ந்து கைக்குண்டொன்று வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வீசப்பட்ட கைக்குண்டு குறி தவறியதை தொடர்ந்து இராணுவத்தினர் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இளைஞர் ஒருவர் பலியானதாகவும், மற்றொருவர் காயத்துடன் கைதானதாகவும் மற்றும் 9 இளைஞர்கள் தப்பிச்சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

40 ஸ்ரீ 3825 இலக்கத்தை கொண்ட 'வான்' அப்பகுதியிலுள்ள சிங்கள ஒப்பந்தகாரருடையதென பின்னர் தெரியவந்துள்ளது.

இந்த 'ட்ரக்' அவரிடமிருந்து தீவிரவாத இளைஞர்களால் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தீவிரவாத இளைஞர்கள் 'ரோஸ்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று காயமடைந்தவர் மூலம் தெரியவந்துள்ளதாம்.

திருகோணமடு விகாரை, வெலிகந்தை பகுதியில் உள்ள நடுக்காட்டில் பொலநறுவையிலிருந்து 50 மைல் தூரத்தில் மூதூர் பொலநறுவை எல்லையில் உள்ளது. (க)

யாழ். பாடசாலைகளில் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களம் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கும், 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் நொக்கவுட் போட்டிகளை உதைபந்தாட்டத்தில் நடத்த முன்வந்துள்ளது. தொடர்ந்து யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் 15, 17, 19 வயதிற்குட்பட்ட மூன்று குழுக்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளையும் நடாத்த முன்வந்துள்ளது.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தவர்கள் போட்டிகளை மத்தியஸ்தம் செய்வார்கள்.

ஜீப் பற்றி தகவல் இல்லை

[கல்வியங்காடு]

யாழ்ப்பாணம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ யோகேஸ்வரனின் ஜீப் கடந்த மாதம் 25-ம் திகதி எடுத்துச் செல்லப்பட்டு இதுவரையும் திருப்பி ஒப்படைக்கவில்லை என்றும் அதுபற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில்
காந்திஜி பயணஞ்செய்த இடங்களில் நினைவுச்சின்னம்

(உரை)

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தியடிகள் சுற்றுப்பயணம் செய்த சில இடங்களிலும் நினைவுச்சின்னங்கள் அமைக்கப்போவதாக காந்திகாம ராஜ்ஜட்சித்தலைவர் திரு குமரி அனந்தன் கூறியுள்ளார்.

அவர் மேலும் காந்திஜியின் "இலவச பயிர்விதைப் பொட்டலம் வழங்கும்" திட்டத்தையும் தமது கட்சி தொடர்ந்து மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளார். (பி)

தொடரும் முழக்கங்கள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப்பகுதியில் நடுச்சாமத்தில் இடம் பெற்ற குண்டுச்சத்தத்தால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியவில் காங்கேசன்துறைப்பகுதியில் இடம் பெற்ற பீரங்கி வேட்டுச்சத்தம் மக்களை கிலி கொள்ளச் செய்தது.

திடீரென கேட்டபாரிய சத்தங்களால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முற்பட்ட போதும் சொற்ப நேரத்தில் சத்தங்கள் நின்றதால் மக்கள் நிம்மதியடைந்தனர்.

இதற்கிடையில் நேற்றுக் காலையிலும் கடற்பகுதியில் இருந்து குண்டுச்சத்தங்கள் கேட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைபெறும் 2-வது மலாய் மாநாடு!

(தொழும்பு)

இரண்டாவது உலக மலாய் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது.

கொழும்பு கலதாரி ஹோட்டல் மண்டபத்தில் இம் மாநாட்டை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா சம் பிரதாய பூர்வமாக தொடக்கி வைத்தார்.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமட். கொழும்பு மத்திய தொகுதி 2-வது எம். பி ஜனாப் ஜாபீர் காதர், கொழும்பு மத்தி 3-வது எம். பி. ஜனாப் ஹலிம் இஷாக், பிரதம நீதி அரசர் திரு எஸ் சர்வானந்தா மற்றும் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள், மலாய் உறுப்பினர்கள் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் 50 000 மலாயர்கள் பரவலாக வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது.

சோதிடர் ஆய்வு மன்ற நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சோதிடர் ஆய்வு மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தில் திரு. நா. கப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகசபை உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு நா சுப்பிரமணியக் ஐயர், உபதலைவர் திரு வே சின்னத்துரை, இணத்தையா, பொதுச்செயலாளர் எஸ் எஸ் நடராசா, உபசெயலாளர் திரு. வ. நடராசா, பொருளாளர் திரு. மு மு மார்க்கண்டு.

ஒன்பது பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ச)

கிரிக்கெட் குழுக்களுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், 15, 17 வயதுக்குட்பட்ட கிரிக்கட் குழுக்களுக்கு தேநீர் விருந்தளித்து பாராட்டியது.

கல்லூரி அதிபர் திரு ச. பொன்னம்பலம் தலைமையில் நடந்த மேற்படி வைபவத்தில் செயலர் திரு சங்கரும், பெற்றோர் சார்பில் திரு மாணிக்கவாசகரும் பாராட்டுரை வழங்கினர். பயிற்றுனர்கள் திரு வாளர்கள் நவித்தியாதரன், யோ. ஜெயந்தன், பொ. கௌரிசங்கர் மூவரும் பாராட்டுக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டார்கள். செல்வன் கார்த்திகேசன் 17 வயதுக்குட்பட்டோர் கப்டன்) நன்றியுரை வழங்கினர்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

தென்மராட்சி ப. நோ. கூ. சங்கம்
தலைவர், செயலர், ஆணையாளர் மீதான வழக்கு தள்ளுபடி

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிதடிப.நோ கூ.சங்கஇயக்குநர்சபைஉறுப்பினர்களால் சங்கத்தின் தலைவர், செயலாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி ப. நோ.கூ.ச. உறுப்பினர்களாகிய த. செல்வதுரை, இ. வேலாயுதம், நா. செல்வராசா, வே. தயாளன், த. அமிர்தலிங்கம், அ. சந்திரசேகரம், நா ஸ்ரீரங்கநாதன், வே மார்க்கண்டு, த. ஆறுமுகம், கு. உதயகுமார் ஆகியோரால் ப.நோ.கூ. சங்கத் தலைவர் சு. கணேசன், செயலாளர் சி. கதிர்காமநாதன், கூட்டுறவு உதவி ஆணையாளர் வே. நடராசா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி.பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சொல்லப்பட்ட மூன்று எதிராளிகளும், மேற் சொல்லப்பட்ட 10 உறுப்பினர்களின் சட்ட பூர்வமான உரிமையை மறுத்துள்ளதாகவும் அதன் பிரகாரம் ப. நோ. கூ. சங்கத்தின் விசேட கூட்டத்தை உடனடியாகக் கூட்டும்படி மாவட்ட நீதிமன்று கட்டளை இடவேண்டுமெனவும் மாவட்ட நீதிமன்றைக் கேட்டிருந்தனர்

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நிருமதி அம்பிகைபாலன், இவ்வழக்கில் சாட்சியின்மையாலும் நெறியாளர் குழுவில் தற்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாலும் வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை என்று தெரிவித்தார்.

அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மாவட்ட நீதிபதி எதிராளிகளை செலவு தொகையின்றி விடுவித்து வழக்கை தள்ளுபடிசெய்தார்.

எதிராளி சார்பில் சட்டத்தரணி ம.பொ.மயில்வாகனம் ஆஜராஞர். (மா)

எத்தனை சட்டங்கள்வந்தாலும் உண்மையைத்தான் பிரதிபலிப்பேன்!
நீதிமன்றத்தில் சிங்கராயர்

(தொழும்பு)

எத்தனை பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் அரசாங்கம் கொண்டுவந்தாலும் உண்மையைத்தான் நான் பிரதிபலிப்பேன். ஆனால் உண்மைக்காக வாழ்வது கஷ்டம்.

வண பிதா ஆபரணம் சிங்கராயர் சொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்ற நீதிபதி எச் டபிளியூ சேனநாயக்க முன்னிலையில் அவசரகாலசட்டத்தின் கீழ் நடைபெறும் இவ்வழக்கில் அரசதரப்பு சட்டத்தரணி கி. ஆர். டி. ரத்னவா வண. பிதா சிங்கராயரை குறுக்கு விசாரணை செய்த போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தாது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய கிழக்கில் இருந்து பணம் அனுப்பியவர்கள் இன்றும் உயிருடன் உள்ளனர். அரசாங்கம் என்னைப் பிணையில் விட்டிருந்தால் பல முக்கிய ஆவணங்களை என்னால் இங்கு சமர்பித்திருக்க முடியும் அரசதனக்கு சார்பானவற்றையே இங்கு சமர்பிக்கிறது.

அரசாங்கம் என்னை பொய்க் காரணங்களைக்காட்டி 1982ம் ஆண்டு எனக்கு இரண்டு குற்றப் பத்திரங்கள் சமர்பிக்கப்பட்டன. ஒரு குற்றச்சாட்டுடன் இருந்தவர்கள் தப்பி சென்று விட்டனர். அல்லது அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் ஆனால் நான் மாத்திரம் அப்படி போகாமல் பொறுமையாக இருந்தேன் இங்கு உண்மையை எடுத்துக் கூறவே நான் தப்பிப்போகாமல் இருந்தேன்

இந்த வழக்கில் பணம் மாத்திரம் அல்லாது எனது நடத்தையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. எனது டயறிகள், வைபல்கள் எல்லாவற்றையும் அரசு தந்தால் எனது நிலையை தெளிவாக்கமுடியும். குறிப்பிட்ட கிழப்பு அட்டையுடன்கூடிய டயறி போன்றதொரு பைல் அதில் முக்கியமானது. இவற்றை எல்லாம் எனக்குத் தந்ததவறாது நீதிமன்றத்தை நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வியாழக்கிழமை நான் சாட்சியமளித்தபோது தடுமாற்றமடைந்த நிலையில் இருந்தேன். நான் பலவித மான நிதிகளை மேற்பார்வை செய்திருக்கின்றேன். பற்றுச் சிட்டுக்களில் கையெழுத்து வைக்கும்படி ரவி கேட்ட போது அந்தப் பற்றுச் சிட்டுக்களை நான் பார்வையிட்டேன். ரவிக்கு எவ்வளவு பணம் கிடைத்தது என்பது பற்றி ஒவ்வொருதடவையும் அவரைக் கேட்க விரும்பவில்லை. ஆனால் பத்து லட்சம் ரூபாவுக்கு மேல் பணம் கிடைத்தபோது ரவி அது பற்றி என்னிடம் கூறினார்.

இது 1980, 81, 82 ஆகிய ஆண்டுகளில் நடந்தது எனது டயறி தற்போது இரகசியப் பொலிசாரிடம் உள்ளது.

இது எனக்குக் கிடைத்தால் எனது நிலையை உறுதிப்படுத்த முடியும்.

மத்தியகிழக்கிலிருந்து வந்த மற்றைய கடிதங்களை அவர்கள் வேண்டுமானால் மறைத்துக் கொள்ளட்டும் ஆனால் X—6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டயறியை மாத்திரம் தரும்படி இந்த நீதிமன்றத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

முதல்முறையாக இந்த வழக்கில் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைகள் வண. பிதா சிங்கராயருக்கு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டே விசாரணைகள் நடைபெற்றன.

படிவங்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கச்சேரியுள்ள பிறப்பு இறப்பு பதிவாளர் காரியாலயத்திற்கு தேவையான சில படிவங்கள் நேற்று வந்துசேர்ந்தன.

இப்படிவங்கள் இல்லாததினால், பிற்பகுதி பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறமுடியாத நிலையிருந்தது. இன்றுமுதல் வழமைபோல் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும். (க)

கிளிநொச்சிப் பகுதியில் ஆசிரியர்களாக ஐந்து வருடம் பணியாற்றிய அனைவரும் நிரந்தரமாவர்!
கல்விச்சேவைஆணைக்குழுஉறுப்பினர்உறுதி

(கிளிநொச்சி)

"கிளிநொச்சிமாவட்டத்தில் ஐந்து வருடங்கள் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்த அனைவருக்கும் நிரந்தர ஆசிரியர் பதவி வழங்க ஆவனசெய்வேன்" என்று கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி க ஜெயக்குமார் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் குறிப்பிட்டார். கல்விப் பணிபபாளர் ஜனும் எம். எம். மஹ்ரூருக்கு கிளிநொச்சி மாவட்ட அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் அளிக்கப்பட்ட பாராட்டுவைபவத்தில் அவர்உரையாற்றினார். கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் மேலும் பேசுகையில் "கிளிநொச்சி மாவட்டம் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதுவே எல்லோருடைய பேராவாகும் இந்த இலட்சியத்துக்காகவே ஜனுப் மஹ்ரூர் பாடுபட்டவருகிறார்" என்றார்.

"தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் அதேவேளை இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஐந்துவருடங்கள் கற்காலிக அதிபர்களாக கடமையாற்றிவரும் அனைவரது பதவிகளையும் நிரந்தரமாக்க கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்வேன்" என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் இராசின்னத்தம்பி முன்னிலை மாவட்டசபை உறுப்பினர் இ கிருஷ்ணராசா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

வன்செயலால்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதிப்புக்குள்ளானவர் அல்லது அவரது உறவினர் இத்தப் புகாரைச் செய்தல்வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

திம்பு பேச்சுக்கள் பற்றி நேபாளத்தூதுவர் நம்பிக்கை

[தொழும்பு]

"இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான திம்புப் பேச்சுவார்த்தைகளில் சுமூகமான தீர்வை ஏற்படுத்தும்" என்று இலங்கைக்கான நேபாளத் தூதுவர் திரு ஜேந்திர பகதூர் ராஜ்பண்டாரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் திரு.சாஹுல் ஹமீத்தைச் சமீபத்தில் சந்தித்து உரையாடிய பொழுதே அவர் இவ்வாறு கூறினார்.

டாக்காவிலிருந்து கடமை யாற்றிவரும் இவர், இருநாடுகளுக்கிடையிலான உறவுகள் பற்றியும் வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடினார். (து)

1984 க. பொ. த. (சாதாரண) பரீட்சை
சில பாடங்களின் முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை

(உடுவில்)

1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி சி ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் கடந்த மாதத்தில் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் சில பாடங்களுக்கான பெறுபேறுகள் இதுவரை அனுப்பி வைக்கப்படாமையால் பல மாணவர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

மனைப் பொருளியல் சங்கீதம், உலோகவேலை போன்ற பாடங்களுக்கு தோற்றிய யாழ்ப்பாண மாவட்ட பரீட்சார்த்திகள் பலருக்கு அவற்றின் முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லையாம்

இப்பெறுபேறுகள் சிலபாடசாலை பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கவில்லை!

இம்முடிவுகள் கிடைக்கப் பெறுமையால் பல பரீட்சார்த்திகள் தமது உயர் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

கல்லூரிகளில் உயர் வகுப்புக்களில் சேர்வதற்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றமையால் தாம் உயர்கல்வி பெறும் வாய்ப்பை இழந்து விடுவோமா என்ற அச்சத்தில் இவர்கள் உள்ளனர்.

பாடசாலை அதிபர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது பற்றி பரீட்சை ஆணையாளருக்கு முறையீடு செய்து பலநாட்களாகியும் ஆணையாளரிடமிருந்து எதுவித பதிலும் இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

அஞ்சலிப் பிரசுரம்

யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலைப் போராட்டத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் சின்னத்துரை கிருபாகரன் (டெல்வன், சைமன், வல்லிபுரம்), மூதூர்ப்பகுதி அமைப்பாளர் சாமித்தம்பி லோகேந்திரராஜா (அகிலன்) ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கு அஞ்சலி செலுத்தி துண்டுப் பிரசுரம் ஒன்று நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழப் போராளிகள் திருபாகரன், லோகேந்திரராஜா ஆகியோருக்கு எமது இதய அஞ்சலிகள்' 'புளட்' இவ்விருந்து வெளியேறியவர்களென்று குறிப்பிடப்பட்டுள்ள டிப்பிரகரம் தீப்பொறி வெளியீட்டினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. (மா)

இந்திய..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசின் புதியபோக்கினைக்காத்திரமானதாகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நியாயபூர்வமாகத் தீர்க்கக்கூடியதாகவும் அமைதல் வேண்டும் எனக்கருதுவதாகத் தெரிகின்றது

இத்தகையில் இருதரப்பினருக்கும் உதவிபுரியும் வகையில் இந்தியப்பிரதமர் தமது விசேஷ தூதுவரை இலங்கைக்கு மீண்டும் அனுப்புகிறார் என்று கருதப்படுகின்றது

திட்டத்தை மாற்றக் கோருவார்

கடந்தமாதம் இடம்பெற்ற பேச்சுக்களின்போது மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதாக இலங்கை அரசு முன்வைத்த திட்டத்தை மாற்றிக்கொண்டு புதிய திட்டங்களை முன்வைக்கும்படி இந்திய வெளியுறவுச் செயலர், ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவைக் கேட்டுக் கொள்வார் என்று இந்திய தலைநகரிலிருந்து கிடைக்கும் ஒரு செய்தி கூறுகிறது

திரு பண்டாரி இலங்கையில் எத்தனைநாட்கள் தங்கியிருப்பார் என்று தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதியை மாத்திரமின்றி பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி, பிரதமமந்திரி திரு ஆர். பிரேமதாசா, வெளிநாட்டமைச்சர் திரு. ஏ எஸ். எஸ் ஹமீத் ஆகியோரையும் சந்திப்பார் என்று தெரிகின்றது.

கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமானும் திரு பண்டாரியைச் சந்தித்திருக்கிறார்.

9—ம் திகதி இலங்கைக் குழு புறப்படும்

திம்புப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் இலங்கை அரசின் குழுவினர் வரும் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை இங்கிருந்து புறப்பட்டுச் செல்கின்றனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிதாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 65ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,